10.08.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### சாத்தான்குளம் விவசாயிகள் லக்னௌவுக்கு பயணம்

சாத்தான்குளம் விவசாயிகள் உத்தரபிரதேச மாநிலம் லக்னௌவுக்கு கண்டறிதல் பயிற்சி பெற சென்றுள்ளனர்.

தமிழ்நாடு அரசு வேளாண் மற்றும் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் கீழ் விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தில் சாத்தான்குளம் வட்டார விவசாயிகளுக்கு கரும்பு பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை தொடர்பாக வெளி மாநில கண்டறிதல் பயிற்சிக்கு உத்தரபிரதேச மாநிலம் லக்னௌவில் அமைந்துள்ள இந்திய கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தில் பயிற்சி பெற 20 விவசாயிகளுடன் சாத்தான்குளம் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜலட்சுமி,உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் முருகன் மற்றும் முத்துமாலை ஆகியோரும் சென்றனர்.

வெளி மாநில பயிற்சி செல்லும் சாத்தான்குளம் வட்டார விவசாயிகளுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் உத்தண்டராமன் மற்றும் வேளாண்மை அலுவலர் நெடுஞ்செழியன் ஆகியோர் பயணக்குறிப்புகள் கொடுத்து வழியனுப்பி வைத்தனர்.

# வறட்சி, வெள்ளத்தைத் தடுக்க முடியும்: கிரண்பேடி




சென்னையில் திங்கள்கிழமை நடைபெற்ற விழாவில், வறண்ட நிலங்களுக்கான சர்வதேச பயிர் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் டேவிட் பெர்க்வின்சனுக்கு "டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விருது' வழங்குகிறார் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் கிரண்பேடி. உடன் வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன், சென்னை ரோட்டரி சங்கம் கிழக்கு- தலைவர் கே.ஆனந்த்.

வறட்சி, வெள்ளம் ஆகிய இயற்கைப் பேரிடர்களைத் தடுக்க முடியும் என்று புதுச்சேரி துணைநிலை ஆளுநர் கிரண்பேடி கூறினார்.

சென்னை ரோட்டரி சங்கம் கிழக்கு, கெவின்கேர் நிறுவனம் சார்பில், டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விருது வழங்கும் விழா, சென்னையில் திங்கள்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு அவர் பேசியதாவது: வறட்சி, வெள்ளம் என இரண்டாலும் பாதிக்கப்படும் நாடாக இந்தியா இருக்கிறது. முறையான திட்டமிடல் இருந்தால் வறட்சி, வெள்ளம் ஆகிய இயற்கைப் பேரிடர்களை கையாளவும், தடுக்கவும் முடியும். இதற்கு

அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள், கல்வியாளர்கள், தன்னார்வ நிறுவனங்களின் நிர்வாகிகள் ஆகியோருடன் அனைவரும் ஆண்டு முழுவதும் இணைந்து செயல்பட வேண்டும்.

நீர் நிலைகள் ஆக்கிரமிப்பே காரணம்:

புதுச்சேரியில் வெள்ளம் ஏற்பட்டதற்கு தமிழகத்திலிருந்து வெளியேறிய வெள்ள நீர்தான் காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது. இதற்கும் நீர்நிலைகள் ஆக்கிரமிக்கப்பட்டதுதான் காரணம் என்பதும் தெரிகிறது. அதைச் சீர் செய்ய ஒவ்வொரு நிலத்துக்கும் பட்டா வழங்குவதற்கு முன், அந்த நிலம் நீர் நிலை அல்ல என்பதை உறுதி செய்யும் விதிமுறை கொண்டு வரப்பட வேண்டும். அதேபோன்று காணாமல் போன நீர்நிலைகளைக் கண்டறிய வேண்டும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில், ஹைதராபாத்தில் உள்ள வறண்ட நிலங்களுக்கான சர்வதேச பயிர் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் டேவிட் பெர்க்வின்சனுக்கு, டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விருது வழங்கப்பட்டது.

## மண் மாதிரி விழிப்புணர்வு முகாம்

நம்பியூர் வட்டார வேளாண்மைத் துறை, கடத்தூர் பேங்க் ஆஃப் பரோடா ஆகியன சார்பில் பல்வேறு கிராமங்களில் மண்மாதிரி விழிப்புணர்வு முகாம்கள் திங்கள்கிழமை நடத்தப்பட்டன.

இந்நிகழ்ச்சிக்கு, நம்பியூர் வேளாண்மை உதவி இயக்குநர் அ.நே.ஆசைத்தம்பி தலைமை வகித்தார். கடத்தூர் பரோடா வங்கி கிளை மேலாளர் ராஜேஷ்குமார் முன்னிலை வகித்தார்.

சாணார்புதூர், கடத்தூர், சுண்டக்காம்பாளையம், தொட்டிபாளையம், நாகரனை, சுட்டிக்கல்மேடு, கூடக்கரை, மோடூர்பாளையம் ஆகிய 8 கிராமங்களில் இந்த முகாம்கள் நடைபெற்றன. குருமந்தூர் உதவி வேளாண்மை அலுவலர் பெரியசாமி, வயல்களில் மண்மாதிரி எடுக்கும் முறைகள் குறித்து நேரடி செயல்விளக்கம் செய்து காண்பித்தார்.

நிகழ்ச்சியில் திரளாக விவசாயிகள் பங்கு கொண்டு பல்வேறு சந்தேகங்கள் கேட்டுத் தெளிவு பெற்றனர். இதில், அந்தந்தப் பகுதி ஊராட்சித் தலைவர்கள், வார்டு உறுப்பினர்கள், கூட்டுறவு கடன் சங்க நிர்வாகிகள், உள்ளாட்சிப்

பிரதிநிதிகள், முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர். நம்பியூர் அட்மா திட்ட உதவி தொழில் நுட்ப மேலாளர் மணிகண்டன் நன்றி கூறினார்.

## விவசாயிகள் சங்க ஆலோசனைக் கூட்டம்

கோத்தகிரியில் மலை மாவட்ட சிறு விவசாயிகள் சங்கத்தின் ஆலோசனைக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு சங்கத் தலைவர் தும்பூர் போஜன் தலைமை வகித்தார். செயலாளர் குள்ளன் முன்னிலை வகித்தார். இதில், 300-க்கும் மேற்பட்ட விவசாயிகள், தனியார் ஏற்றுமதி நிறுவனத்தின் மேலாளர்கள் வினோத், ஐசெக் பிரபு, தனியார் சூப்பர் மார்க்கெட் உரிமையாளர் தனசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில், மாவட்டத்தில் விளையும் அனைத்து மலைக் காய்கறிகளும் இதுநாள் வரை மேட்டுப்பாளையம் கொண்டு சென்று கமிஷன் மண்டிகள் மூலம் விற்கப்பட்டு வந்தது. இதனால், கமிஷன், வாகன வாடகை, ஏற்றுக் கூலி, இறக்கு கூலி என 30 சதவீதப் பணம் விரையமானது. எனவே, மலைக் காய்கறிகளை கோத்தகிரியில் உள்ள தனியார் ஏற்றுமதி நிறுவனம் மூலம் விற்பனை செய்வது என முடிவு செய்யப்பட்டது. சங்கத்தின் துணைச் செயலாளர் பசுவராஜ் நன்றி கூறினார்.

## நீர்வடிப் பகுதி விவசாயிகளுக்குப் பயிற்சி

ராசிபுரம் அருகே வெண்ணந்தூர் வட்டாரம், ஆலாம்பட்டி வருவாய்க் கிராமத்தில் பிரகம மங்கிரி சஞ்சாய் யோஜன திட்டம் குறித்து நீர்வடிப் பகுதி விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

வெண்ணந்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் கு. சுந்தரவடிவேலு வரவேற்றார். ஊராட்சி ஒன்றியக் குழுக் தலைவர் ப.தமிழ்ச்செல்வி தலைமை வகித்தார். "அட்மா' திட்டத் தலைவர் எஸ்.பி.தாமோதரன் பங்கேற்றுப் பேசினார். நாமக்கல் மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை வேளாண்மை துணை இயக்குநர்(பொறுப்பு) செப்ந்தராஜன், பயிற்சியில் கலந்து கொண்ட

விவசாயிகளுக்கு நீர் ஆதாரங்களின் பயன்கள், நீர்வடிப் பகுதி திட்டத்தின் செயல்பாடுகள் குறித்துப் பயிற்சியளித்தார்.

வேளாண்மை பொறியியல் துறை பொறியாளர் சங்கர் குமார் மானியங்கள் குறித்துப் பேசினார். வேளாண்மை அலுவலர் செப்ந்தராஜன், துணை வேளாண்மை அலுவலர் வ.பழனிசாமி, உதவி வேளாண்மை அலுவலர்கள் மேகலா, கருப்புசாமி, அங்கோணிசாமி, ஆரோக்கியசாமி, திருநாவுக்கரசு ஆகியோர் செயல்விளக்கம் செய்து காண்பித்தனர்.

விவசாயிகள் சுந்தரம், பெரியதம்பி ஆகியோர் தங்கள் பகுதியில் நீர்மேலாண்மை மேற்கொண்டதை விளக்கினர். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வழங்கப்பட்டன. வெண்ணந்தூர் வட்டார "அட்மா' திட்ட தொழில்நுட்ப மேலாளர், மா.ரமேஷ், உதவி தொழில்நுட்ப மேலாளர் மா.பார்த்திபன் "அட்மா' திட்டப் பணிகள், திட்ட செயல்பாடுகள் குறித்து விளக்கினார். இதில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**காய்கனி வளர்ப்புக்கு மானியம்**

தோட்டக்கலைத் தொழில்நுட்பமான பசுமைக் குடில் காய்கனி வளர்ப்புத் திட்டத்தின் கீழ், காய்கனி வளர்ப்புக்குப் பின்னேற்பு மானியம் வழங்கப்படும் என நாகை, தோட்டக்கலை துணை இயக்குநர் அ. அற்புதம் தெரிவித்துள்ளார்.

நாகை மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் புதிய அறிமுகமாக தோட்டக்கலை தொழில்நுட்ப பசுமைக் குடில் காய்கனி வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், பசுமைக் குடில் அமைக்க 50 சதவீத பின்னேற்பு மானியமாக, அதிகபட்சம் சதுர மீட்டருக்கு ரூ. 468 வீதம் வழங்கப்படுகிறது. குறைந்தபட்சம் 500 ச.மீட்டருக்கும், அதிகபட்சமாக 4 ஆயிரம் ச. மீட்டருக்கும் ஒரு நபர் மானியம் பெறலாம்.

மானியத் திட்டத்தில் பயனடைய விரும்பும் விவசாயிகள், தொடர்புடைய வட்டார தோட்டக்கலைத் துறை அலுவலர்களை அணுகலாம் அல்லது மாவட்ட

தோட்டக்கலை அலுவலகத்தை நேரில் அணுகலாம் என அவர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## அரவைக்காக சிவகங்கைக்கு ஆயிரம் டன் நெல்

நீடாமங்கலத்திலிருந்து சிவகங்கை மண்டலத்துக்கு ஆயிரம் டன் பொதுரக நெல் அரவைக்காக செவ்வாய்க்கிழமை அனுப்பி வைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக்கிடங்கு மற்றும் திறந்தவெளி சேமிப்பு மையங்களிலிருந்து 75 லாரிகளில் நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்ட இந்த நெல் மூட்டைகள், நுகர்பொருள் வாணிபக்கழக அலுவலர்கள் முன்னிலையில் சரக்கு ரயிலில் ஏற்றப்பட்டு சிவகங்கை மண்டலத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## தமிழகத்தில் சிறுதானிய உற்பத்தியை அதிகரிப்பது அவசியம்: பெண் விவசாயிகள் மாநாட்டில் தீர்மானம்

தமிழகத்தில் சிறுதானிய உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கன்னியாகுமரியில் செவ்வாய்க்கிழமை தொடங்கிய 14ஆவது களஞ்சியம் பெண் விவசாயிகள் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

தமிழ்நாடு பெண்கள் இணைப்புக் குழுவின் 14ஆவது களஞ்சியம் பெண் விவசாயிகள் சங்க 2 நாள் மாநாடு கன்னியாகுமரி விவேகானந்த கேந்திரத்தில் தொடங்கியது. பெண்கள் இணைப்புக் குழுவின் திருநெல்வேலி மாவட்டச் செயலர் பொன்னுத்தாய் தலைமை வகித்தார். குமரி மாவட்ட பெண்கள் இணைப்புக் குழுத் தலைவர் பிலோமினாள் வரவேற்றார். தக்கலை தோட்டக்கலை உதவி இயக்குநர் யோ.ஷீலா ஜாண் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில், "இந்தியாவில் புவிவெப்பமடைதல், அதிக ரசாயன உரங்கள் கலப்பு ஆகியவற்றால் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டும்; கம்பு, குதிரைவாலி, வரகு, காடைகன்னி, சாமை, கேழ்வரகு, பனிவரகு, சோளம், தினை ஆகிய சிறு தானியங்களின் பயன்களை மக்களுக்கு விளக்க வேண்டும்; சிறுதானிய விலையை கட்டுப்படுத்தும் வகையில், அவற்றின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்; பெண் விவசாயிகளுக்கு அரசு சலுகைகள் வழங்க வேண்டும்; பெண் விவசாயிகளுக்கு ஊராட்சிகளிலுள்ள

தரிசு நிலங்களை வழங்க அரசு முன்வர வேண்டும்' என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இம்மாநாட்டில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், மதுரை, திண்டுக்கல், தேனி, நீலகிரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 170 பெண் விவசாயிகள் பங்கேற்றனர். விவேகானந்த கேந்திர நார்டெப் செயலர் ஜி.வாசுதேவ், இயக்குநர் வி.ராமகிருஷ்ணன், நாகர்கோவில் நஞ்சில்லா விவசாயிகள் சங்கச் செயலர் ஏ.மரிய ஜேம்ஸ், ஆயிலியம் இயற்கை மருத்துவ இயக்குநர் சரசம், பெண்கள் இணைப்புக்குழு நிர்வாகிகள் சித்ராதேவி, சுலோச்சனா, சாராள், மேரி ஷீலா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வீட்டுத் தோட்டம் அமைப்பது, இயற்கை பூச்சி விரட்டிகள் ஆகியன குறித்து பிரேமலதா, இயற்கை உரங்கள் மற்றும் மண்புழு உரம் குறித்து ராஜாமணி ஆகியோர் மாநாட்டில் விளக்கமளித்தனர். மதுரை பெண்கள் இணைப்புக் குழுத் தலைவர் காமேஸ்வரி நன்றி கூறினார்.

## விவசாயி வயலில் அதிசய கம்பு

திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், கண்ணாரம்பட்டு கிராமத்தில் விவசாயி மணிகண்டன் என்பவருடைய வயலில் கம்பு பயிரிட்டுள்ளார். அறுவடைக்குத் தயாராக உள்ள கம்பு பயிரில் ஒரே குருத்தில் 5 கம்புகள் வந்துள்ளதை கண்டு ஆச்சர்யம் அடைந்தார். ஒரே குருத்தில் ஒரு கம்பு மட்டும் இருப்பது இயல்பான ஒன்று. ஆனால், ஒரு குருத்தில் 5 கம்புகள் இருப்பது பார்ப்பவர்களிடையே ஆச்சர்யத்தை ஏற்படுத்துகிறது என்கின்றனர் விவசாயிகள்.

# தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### வைக்கோலில் இருந்து எத்தனால்

வைக்கோலில் இருந்து எரிபொருள் எத்தனாலை தயாரிக்க மத்திய அரசு கொள்கையளவில் முடிவுஎடுத்துள்ளது. இயந்திர அறுவடையினால் வைக்கோலின் தரம் குறைகின்றது. கதிர் கொண்டு ஆட்களால் அறுவடை செய்யப்படும் வைக்கோலுக்கு தான் சந்தையில் விலை அதிகம். வைக்கோலில் லிக்னைன் என்ற வேதிப்பொருள் உள்ளது. இது நார்ச்சத்தை செரிக்க விடாமல் கழிச்சலை ஏற்படுத்துகிறது. இந்த லிக்னைன் நீக்கப்பட்ட வைக்கோலில் புரதத்தின் அளவு அதிகம். பால் உற்பத்தியும் அதிகரிக்கும். வைக்கோலில் இருந்து எத்தனால் தயாரிக்கும் தொழில்நுட்பம் பரவலானால் வைக்கோலின் பயன்பாடும் விலையும் அதிகரிக்கும்.

### வறண்ட பூமியில் இனிப்பு வருமானம்



தமிழக வறட்சி மாவட்டங்களில் ராமநாதபுரம் முதலிடம் வகிக்கிறது. மானாவாரி சாகுபடியை நம்பியுள்ள விவசாயிகளுக்கு சில நேரம் மழை கைகொடுக்கும். பல நேரங்களில் கையை விரித்து விடும். இன்பம், துன்பம் இரண்டையும் தாங்கி பழகிய விவசாயிகள் பலர் மாற்று பயிர் விவசாயத்தில் ஆர்வம் செலுத்தி

வருகின்றனர். இதில் ராமநாதபுரம் மும்முடிச்சாத்தான் கிராமத்தின் முன்னோடி விவசாயி அழகுசுந்தரம், சொட்டு நீர் பாசன முறையில் கரும்பு விவசாயம் செய்து சாதனை படைத்து வருகிறார். தனது 61 வயதிலும் 21 வயது இளைஞர் போல் ஆர்வத்துடன் விவசாய பணியில் ஈடுபட்டு வருகிறார்.

**அவர் கூறியதாவது:** எனது குடும்பம் விவசாய குடும்பம். 15 வயதில் விவசாயத்தில் இறங்கினேன். ஏழு ஏக்கர் நிலத்தில் நெல், மிளகாய், எள், பருத்தி என விவசாயம் செய்தோம். போதிய வருமானம் இல்லை. ஆட்களும் கிடைப்பதில்லை. கரிசல் பூமியில் கரும்பு விளைவிக்கலாம், என்ற எண்ணம் தோன்றியது. ராமநாதபுரம் மாவட்டத்தில் கரும்பு சாகுபடியே இல்லாத காலம் அது. 1989ம் ஆண்டு முதன் முதலாக கரும்பு சாகுபடியை தொடங்கினேன். கரும்புக்கு நல்ல விலை கிடைத்தது. செலவும் மிகவும் குறைவு. சர்க்கரை ஆலையில் இருந்து அவர்களே அறுவடை செய்து எடுத்து சென்றதால் கவலை இல்லை.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை 5 ஏக்கரில் சொட்டுநீர் பாசன முறையில் கரும்பு சாகுபடி செய்தேன். சொட்டு நீர்ப்பாசன குழாய்களை எலிகள் கடித்து சேதம் செய்ததாலும், தண்ணீர் பற்றாக்குறையாலும் தற்போது மூன்றரை ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்துள்ளேன். ஒரு ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்வதற்கு உழவு செலவு ரூ.3,000, விதை கரணைக்கு ரூ.5,500, உரம் ரூ.5,000, களை எடுப்பு செலவு ரூ.3,000 உள்பட ரூ.20 ஆயிரம் வரை செலவாகிறது. ஒரு ஏக்கரில் சராசரியாக 55 டன் கரும்பு விளைச்சல் கிடைக்கிறது.

டன் கரும்பு ரூ.2,400 என்ற விலைக்கு சர்க்கரை ஆலையில் கொள்முதல் செய்கின்றனர். இதில் கரும்பு வெட்ட கூலி டன்னுக்கு ரூ.450 பிடித்தம் செய்துபோக ரூ.1,950 வீதம் கிடைக்கிறது. அதன்படி பார்த்தால் செலவு போக ஏக்கருக்கு 87 ஆயிரத்து 250 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. இதற்கு ஓராண்டு காத்திருக்க வேண்டும். அதே நேரம் வேலை ஆட்கள் தேவையில்லை. செலவுகளும் குறைவுதான். 15 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சினாலே போதுமானது. தற்போது பாண்டியூர், மஞ்சக்கொல்லை உள்ளிட்ட பகுதிகளில் கரும்பு சாகுபடி செய்கின்றனர் என்றார். தொடர்புக்கு 99949 19134.

**- எஸ்.பழனிச்சாமி, ராமநாதபுரம்.**

## முருங்கை எனும் சஞ்சீவி தாவரம்



வறண்ட பாசன வசதி மற்றும் குறைந்த வெப்பம் உள்ள பகுதிகளில் முருங்கை நன்றாக வளரும். கிராமங்களில் முருங்கை வளர்ப்பு அமோகமாக உள்ளது. மர முருங்கை, செடி முருங்கை என இரண்டு ரகங்கள் உண்டு. செடி முருங்கையை விதை இட்டு வளர்க்க வெகு விரைவில் வளர்ந்து மென்மையான காய்களையும், கீரையையும் தரும். மர முருங்கையின் மரக்கிளையை தரையில் நட்டு வளர்த்தால் மெதுவாகவும், திடமாகவும் வளர்ந்து பலன் தரும். ஆண்டு தோறும் பிப்ரவரியில் காய்கள் காய்க்கும்.

**முருங்கைப்பூ:** முருங்கைப்பூக்கள் வெளிர் மஞ்சள் நிறத்தில் தோன்றும். இந்தப்பூக்கள் முளைத்த பின் இரண்டு மாதம் கழித்து காய்கள் நார் போன்று தோன்றி படிப் படியாக தடிப்பு பெற்று கவர்ச்சியாகக் காட்சி அளிக்கும். தரமான காய்கள் மிக நீளம் உடையதாக அமையும். தோட்டங்கள், வீடுகள், காலி இடங்களில் முருங்கை வளர்த்து லாபம் ஈட்டலாம். நன்கு வளர்ச்சியடைந்த முருங்கை மரம் பல ஆண்டுகள் வரை நல்ல பலன் தரும். கீரை, காய், பூ, விதை, பட்டை, வேர், ஈர்க்கு, பிசின், எண்ணெய் இவை அனைத்துமே முருங்கை மரத்தால் பெற இயலும்.

**முருங்கைக்கீரை**: கீரை வகையான முருங்கை இலைகளை சுத்திகரித்து உரியவாறு சமைத்து சாப்பிட்டால் உடம்புக்கு ஆரோக்கியமும், வலுவும் ஏற்படும். வைட்டமின் பி, ஊட்டச்சத்து, இரும்புச்சத்து, பீட்டா கரோட்டின் முதலியன அடங்கியுள்ளன. இதை கண்ணீர் விட்டு அரைத்து பற்று போட்டால் சகல வீக்கங்களும் குணமாகும். விளக்கெண்ணெயில் இதை வதக்கி வலியின் மீது ஒத்தடம் இட்டால் குணமடையும். பல்வேறு நோய்களை நீக்கும் மூலிகை வர்க்கம் முருங்கை என சித்த மருத்துவ குறிப்பு உள்ளது.

**முருங்கைக்காய்:** மண் வளத்திற்கு ஏற்றவாறு முருங்கைக்காய் பெரிதாகவோ அல்லது சிறியதாகவோ அளவில் வேறுபடும். இந்த காய்களை அவற்றின் நடுவே இரண்டாக கீறி சாம்பாரில் இட்டால் சீக்கிரம் வெந்து அதிக சுவையை தரும். இவற்றை பொரியல் செய்து சாப்பிடுவது சாலச்சிறந்தது. இவற்றுக்கு சரீரத்தை இளமையாக வைக்கும் ஆற்றல் உள்ளது. சமைத்து உட்கொள்வதன் மூலம் எவ்வகை வாத நோயும் விலகிவிடும். சமைத்து முருங்கைக்காய்களை இளம் விதைகளோடு சாப்பிடுவது ஆண்மை குறைவு நீங்க அருமருந்து.

**பலமிக்க முருங்கை**: முருங்கை விதைக்குள் உள்ள பருப்பை சமைத்து சாப்பிட ரத்தம் சுத்தமாகும். தாய்மார்களுக்கு பால் அதிகம் சுரக்கும். முருங்கை பூக்களை பசும் பாலில் இட்டு காய்ச்சி இரவில் அருந்த ஆண்மை அதிகரிக்கும். இதயம் வலிமையுறும். முருங்கை காம்புகளை (ஈர்க்குகள்) குடிநீரில் இட்டு பருக உடல் வலி, கை கால் அசதி நீங்கும். முருங்கை பிசின் தூளை பாலுடன் கலந்து பருகி வர மேனி அழகு மேம்படும். முருங்கை பட்டை, வேரின் சாற்றை உணவுடன் உட்கொண்டால் கபம், வலிப்பு, குளிர் காய்ச்சல், வாத, வாய்வு தொல்லை நீக்கும். முருங்கை எண்ணெய் (பென் ஆயில்) நாட்டு மருத்துவத்தில் பிணிகளை நீக்கும் பரிகாரமாக பயன்படுகிறது. முருங்கை எனும் ஓர் ஒப்பற்ற சஞ்சீவி தாவரத்தை வீடுகள் தோறும் நட்டு வளர்த்து பயனடைவோம்.

- *முன்னோடி விவசாயி எஸ்.நாகரத்தினம் விருதுநகர்*

## திருந்திய நெல் சாகுபடி ஏன்?



தமிழகத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றுவதால் விவசாயிகளுக்கு பலவித நன்மைகள், செலவினம் குறைகிறது என்பதை அனுபவப்பூர்வமாக உணரப்பட்டுள்ளது.

திருந்திய நெல் சாகுபடி ஏன், விவசாயிகளுக்கு ஏற்படும் பலன்கள் என்ன என்பது குறித்து மதுரை வேளாண் துறையின் இணை இயக்குனர் கனகராஜ் கூறியதாவது: குறைந்த சாகுபடி செலவு. ஏக்கருக்கு 2 - 3 கிலோ விதை போதுமானது. ஏக்கருக்கு 1 சென்ட் நாற்றங்கால் மற்றும் குத்துக்கு ஒரு நாற்று போதும். ஒரு சதுர மீட்டருக்கு 16 குத்துக்கள் போதுமானது. களைகளை கட்டுப்படுத்த களைக்கருவி உபயோகிப்பதால் மனித ஆற்றல் செலவு இல்லை. வயலில் நீரை தேக்கி வைக்க வேண்டிய அவசியமில்லை. இதனால் தண்ணீர் செலவு இல்லை. பாசன நீர் தேவை 40 -50 சதவிகிதம் குறைவு. நீர்ப்பாசனத்திற்கான மின்சாரம் செலவு குறைவு. அதிக வேர் வளர்ச்சி. அதிக வெள்ளை நிற பணியாற்றும் வேர்கள். அதிக ஊட்டச்சத்து உபயோகத்திறன். அதிக தூர்கள், அதிக கதிர்கள், அதிக மணிகள் கிடைக்கும். பயிருக்கு சாயாத தன்மை அதிகமாகிறது. அதிக தானிய, வைக்கோல் மகசூல், அதிக லாபம் கிடைப்பதால் திருந்திய நெல் சாகுபடி விவசாயிகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்றார்.

## தேயிலை விற்பனையில் டான்டீ சாதனை சிறந்த முகவர்களுக்கு கவுரவம்

குன்னூர்: குன்னூரில், டான்டீ சில்லறை விற்பனை முகவர்களுக்கான கூட்டம் நடத்தப்பட்டது.

குன்னூரில் உள்ள டான்டீ நிர்வாகம், சில்லறை தேயிலை துாள் விற்பனையில், 2.69 கோடி ரூபாய் எட்டியுள்ள நிலையில், முகவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது.

குன்னூரில், தமிழ்நாடு தேயி லை தோட்டக்கழகம் (டான்டீ) செயல்பட்டு வருகிறது. இந்த நிர்வாகத்தின் முயற்சியால், கடந்தாண்டு சில்லறை விற்பனையில், 2.60 கோடி ரூபாயை எட்டியுள்ளது.
அதே சமயத்தில் விற்பனை முகவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது.

இந்நிிலயில், அனைத்து விற்பனை முகவர்களை ஊக்குவிக்கும் நோக்கில், கூட்டம் நடத்தப்பட்டது.

கூட்டத்திற்கு, டான்டீ நிர்வாக இயக்குனர் ராஜீவ் ஸ்ரீவத்ஸவா தலைமை வகித்தார். பொதுமேலாளர் ராகேஷ்குமார் ஜகனியா, கோட்ட மேலாளர் ஸ்ரீதர் முன்னிலை வகித்தனர்.

பொதுமேலாளர் ராகேஷ்குமார் ஜகனியா,தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்தின், படிப்படியான வளர்ச்சி குறித்து, படக் காட்சிகள் மூலம் விளக்கினார்.

தொடர்ந்து, தேயிலை துாள் மொத்த விற்பனையில் முதலிடம் பெற்ற மதுரை மொத்த விற்பனை முகவர் ஞானசேகரன், இரண்டாமிடம் பெற்ற சேலம் மொத்த விற்பனை முகவர் ஆண்டனி, மூன்றாமிடம் பெற்ற வட சென்னை மொத்த விற்பனை முகவர் பாண்டியன் அவர்களுக்கு கூட்டத்தில் பரிசுக் கோப்பைகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. தொடர்ந்து, முகவர்கள் பலர் பேசினார்.
கோட்ட மேலாளர் சிவானந்தன் நன்றி கூறினார்.

## மரப்பட்டையில் கயிறு தயாரிக்கும் ஆதிவாசிகள்

கூடலூர்: முதுமலை வளர்ப்பு யானை களை கட்ட, 'வக்கை' மர நாரிலிருந்து, கயிறு தயாரிக்கும் பணியில் ஆதி வாசிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

முதுமலை புலிகள் காப்பகம், தெப்பக்காடு யானைகள் முகா மில், 24 வளர்ப்பு யானைகள், பராமரிக்கப்பட்டு வருகின்றன. யானைகளை நைலான் கயிற்றில் கட்டும் போது, காயம் ஏற்பட வாய்ப்புள்ளது.

இதனை தவிர்க்க, ஆதிவாசி மக்கள், காட்டில் கிடக்கும் 'வக்கை' என்ற மரப்பட்டையின், பெரியளவிலான கயிறு தயாரித்து பயன்படுத்தி வருகின்றனர். தற்போது, இதற் கான பணியில் பல ஆதிவாசிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில், அதிக அனுபவம் வாய்ந்த, ஓய்வு பெற்ற யானை பாகன் மாறன் கூறுகையில், “யானைகளின், கழுத்து, கால்க ளில் கயிற்றால் (வடம்) கட்டும் போது, பாதிப்பு ஏற்படுவதை தவிர்க்க, மர பட்டை நாரிலி ருந்து கயிற்றை உருவாக்கி பயன் படுத்தி வருகிறோம். இதனை மூன்று ஆண்டுகள் வரையில் பயன்படுத்த முடியும்,” என்றார்.

## பப்பாளி விளைச்சல் விவசாயிகள் ஆர்வம்

கூடலூர்: கூடலூரில் பப்பாளி பழம் விளைவிப்பதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கூடலூர் பகுதியில், தேயிலைக்கு அடுத்தபடியாக, மலை காய்கறி உற்பத்தி அதிகரித்து வருகிறது. தற்போது, இங்கு ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தை கருத்தில், குணில் பகுதி விவசாயிகள் சிலர் வயல்களில், பழ வகைகளை உற்பத்தி செய்து வருகின்றனர். அதில், பப்பாளி உற்பத்தி எதிர்பார்த்த வகையில் இருப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

விவசாயிகள் கூறுகையில், 'தற்போது பப்பாளிக்கு நல்ல விலை கிடைப்பதால், இதன் உற்பத்தியை அதிகரிக்க முடிவு செய்துள்ளோம்' என்றனர்.

## சிறு வியாபாரிகளிடம் கொப்பரை வாங்க மறுப்பு தென்னை விவசாயிகளுக்கு பாதிப்பு

திண்டுக்கல்: கொப்பரை வாங்க மறுக்கும் அதிகாரிகளால்,தனியாருக்கு விற்பனை செய்யும் தென்னை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சாணார்பட்டி, கோணப்பட்டி, அஞ்சுகுழிபட்டி, கோபால்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் பல்வேறு சிறு விவசாயிகள் 3 ஏக்கர் அல்லது 5 ஏக்கரில் தென்னை விவசாயம் செய்கின்றனர். விவசாயிகளிடம் உள்ள கொப்பறைகளை 'கொள்முதல் மையம்' மூலம் நேரடியாக வாங்கிக் கொள்ளப்படும் என, மாவட்ட வேளாண் நிர்வாகம் கடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தெரிவித்தது.

இதனால் வாரத்தில் வியாழன்தோறும் திண்டுக்கல் - மதுரை பைபாஸ் ரோட்டில் உள்ள கொப்பரை கொள்முதல் மையத்திற்கு சாணார்பட்டி விவசாயிகள் கொப்பறைகளை கொண்டு வந்தனர். அரசு மூலம் கிலோ ரூ.59.50 என விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் சிறுவிவசாயிகளிடம் அதிகாரிகள் கொப்பறை வாங்க மறுத்து விவசாயிகளை திருப்பி அனுப்பினர். இதனால் திண்டுக்கல்லுக்கு கொப்பறைகளை கொண்டு வரும் விவசாயிகள் அதிருப்தி அடைந்தனர். கொண்டு வரும் கொப்பறைகளை வேறு வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு விற்பனை செய்யும் நிலையும் ஏற்பட்டது.

இதுகுறித்து நேற்று கலெக்டர் அலுவலக குறைதீர் கூட்டத்தில் எமக்கலாபுரம் விவசாயி பழனிவேலு மனு அளித்தார்.

அவர் கூறியதாவது: நாங்கள் சிறு விவசாயிகள் என்பதால் நஷ்டம் அதிளவில் ஏற்படுகிறது. கலெக்டர் இதுகுறித்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். என்னோடு சேர்த்து எங்கள் பகுதிகளில் 75க்கும் மேற்பட்ட சிறு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர், என்றார்.

## விளைச்சல் இருந்தும் விலையின்றி தவிக்கும் வெண்டை விவசாயிகள்

திண்டுக்கல்: திண்டுக்கல்லில் கடந்த 15 நாட்களாக ஒரு கிலோ வெண்டை ரூ.7க்கு விற்பனையாவதால், விளைச்சல் இருந்தும் விலையின்றி விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 540 எக்டேரில் வெண்டை பயிரிடப்படுகிறது.

40 நாள் பயிர் என்பதால் ஊடுபயிராகவும், தனிப்பயிராகவும் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். கடந்த மாதத்தில் கிலோ ரூ.45க்கு விற்பனையான வெண்டை, கடந்தவாரத்தில் கிலோ ரூ.10க்கு குறைந்தது. தற்போது கிலோ ரூ.7 விற்பனையாவதால் விவசாயிகள் 'எடுப்புக் கூலிக்குக்கூட லாபம் இல்லையே' என, தவித்து வருகின்றனர்.

திண்டுக்கல் பாப்பனம்பட்டி விவசாயி முருகன் கூறியதாவது:

2 ஏக்கரில் வெண்டை பயிரிட்டுள்ளேன். நாற்பது நாட்களுக்கு ஒரு முறை 100 கிலோ 120 கிலோ வரை வெண்டை அறுவடை செய்கிறேன். பல விவசாயிகள் வெங்காயத்தோடு, வெண்டையும், கத்தரியோடு வெண்டையை ஊடுபயிராகவும் பயிரிட்டு வருகின்றனர். கடந்த மாதத்தில் நல்ல விலைக்கு போன வெண்டை, தற்போது திடீரென விலை இறங்கியுள்ளது வேதனையாக உள்ளது. என்றார்.

## இயற்கை வேளாண்மை விவசாயிகளுக்கு பயிற்சி

விக்கிரவாண்டி: இயற்கை வேளாண்மை சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது.

விக்கிரவாண்டி வட்டார வேளாண்மை துறை சார்பில், ஆசூர் தெற்கு பொன்னங்குப்பம் கிராமத்தை சேர்ந்த முன்னோடி விவசாயிகள் 50 பேர், இயற்கை வேளாண்மை சாகுபடி செய்ய தேர்வு செய்யப்பட்டனர். திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடந்த, இயற்கை வேளாண்மை சாகுபடி குறித்த பயிற்சியில், திட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் டாக்டர் ஷீபா, உதவி பேராசிரியர்கள் டாக்டர் ராதாகிருஷ்ணன், பரமேஸ்வர், கவிதா, வேளாண்மை உதவி இயக்குனர் செல்வபாண்டியன் ஆகியோர் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர் .

விக்கிரவாண்டி வட்டார தொழில் நுட்ப மேலாளர் சாம்பசிவம் , உதவி வேளாண்மை அலுவலர்கள் குமார், வாசுதேவன், விஜயலட்சுமி, உதவி மேலாளர் சிட்டி பாபு, பொன்னங்குப்பம் கிராமத்தை சேர்ந்த அங்கக பண்ணை (இயற்கை ) விவசாயிகள் 50 பேர் பங்கேற்றனர்.

## ரூ.35 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம்

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டை ஆர்.சி.எம்.எஸ்.,ல் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இதில், விரலி ரகம் அதிகபட்சம், 100 கிலோ மூட்டை, 10 ஆயித்து, ஐந்து ரூபாய், குறைந்தபட்சம், 8,501 ரூபாய்க்கும் விலை போனது. உருண்டை ரகம் அதிகபட்சம், 8,712 ரூபாய், குறைந்தபட்சம், 7,312 ரூபாய்க்கும் விற்பனையானது. பனங்காலி ரகம் அதிகபட்சம், 20 ஆயிரத்து,865 ரூபாய், குறைந்தபட்சம், 11 ஆயிரத்து,685 ரூபாய்க்கும் ஏலம் போனது. விரலி, 450, உருண்டை, 200, பனங்காலி, 30 என மொத்தம், 680 மூட்டைகளும், 35 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

## ஆக., 17ல் சின்ன வெங்காயம், பருத்தி சாகுபடி பயிற்சி முகாம்

மோகனூர்: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் அகிலா வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 17ம் தேதி, காலை, 9 மணிக்கு, சின்ன வெங்காயம், தென்னை மற்றும் பருத்தி சாகுபடியில், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண் என்ற தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது. இதில், மண் மற்றும் பாசன நீர் ஆய்வின் முக்கியத்துவம், மாதிரி எடுக்கும் முறை, சின்ன வெங்காயம், தென்னை மற்றும் பருத்தி சாகுபடியில் முக்கிய தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கப்படுகிறது. விருப்பம் உள்ளவர்கள், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் செயல்படும், வேளாண் அறிவியல் நிலையத்துக்கு, நேரிலோ அல்லது, 04286 - 266 345, 266 650 என்ற எண்ணிலோ தொடர்பு கொண்டு, தங்களது பெயர்களை, 16ம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அடர்நடவு முறையில் 100 எக்டேரில் மா

சிவகங்கை: சிவகங்கை மாவட்டத்தில் அடர் நடவு முறையில் 100 எக்டேரில் மா நடவு செய்ய தோட்டக்கலைத்துறை இலக்கு நிர்ணயித்துள்ளது.

மாவட்டத்தில் சிவகங்கை, காளையார்கோவில், எஸ்.புதுார் உள்ளிட்ட பகுதிகளில் 2,500 எக்டேரில் மா மரங்கள் உள்ளன. இங்கு அல்போன்சா, பங்கனப்பள்ளி, பெங்களூரா, நீலம் ரகங்கள் உள்ளன. இவை பழைய முறைப்படி 10 மீ.,க்கு 10 மீ., இடைவெளியில் நடவு செய்யப்பட்டுள்ளன. இதனால் ஒரு எக்டேருக்கு 100 மரங்கள் மட்டுமே உள்ளன. அடர் நடவு முறையில் ஒரு எக்டேருக்கு 400 செடிகள் நடலாம். இந்த ஆண்டு மாவட்டத்தில் அடர் நடவு முறையில் 100 எக்டேரில் மா நடவு செய்ய தோட்டக் கலைத்துறை இலக்கு நிர்ணயித்துள்ளது.

துணை இயக்குனர் ராஜேந்திரன் கூறுகையில், “ஒரு எக்டேருக்கு ரூ.9,800 மானியம் வழங்கப்படும். இந்த தொகைக்கு குட்டை ரக செடிகளை நாங்களே வினியோகம் செய்வோம். இதன் மூலம் மா உற்பத்தி அதிகரிக்கும். விரும்பும் விவசாயிகள் வட்டார தோட்டக்கலை அலுவலகத்தை அணுகலாம், என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 4,268 பருத்தி மூட்டைகள் ரூ.50 லட்சத்துக்கு விற்பனை

ராசிபுரம் : அக்கரைப்பட்டி தொடக்க கூட்டுறவு வங்கியில் நேற்று நடந்த பருத்தி ஏலத்தில், 4,268 மூட்டைகள் ரூ.50 லட்சத்துக்கு ஏலம் போனது. ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு உட்பட்ட அக்கரைப்பட்டி தொடக்க கூட்டுறவு வங்கி வளாகத்தில் நேற்று பருத்தி ஏலம் நடந்தது. இதில் அக்கரைப்பட்டி, மதியம்பட்டி, பொரசல்பட்டி உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் தங்களது விளைநிலங்களில்

அறுவடை செய்யப்பட்ட 60 கிலோ கொண்ட 4,268 சுரபி ரக பருத்தி மூட்டைகள் ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

ஒரு மூட்டை குறைந்த பட்சவிலையாக 5,455க்கும், அதிகபட்சமாக ரூ.6,464க்கும் ஏலம் போனது. இதன்மூலம் மொத்தம் ரூ.50 லட்சத்துக்கு விற்பனை நடந்தது. இதில், திருச்செங்கோடு, மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம், சேலம் ஆகிய பகுதிகளிலிருந்து 50க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்து கொண்டு பருத்தி மூட்டைகளை ஏலத்தில் எடுத்தனர்.

**பசுந்தாளுர பயிர் தக்கைப்பூண்டு சாகுபடி வயல்களில் ஆய்வு**

திருத்துறைப்பூண்டி : திருத்துறைப்பூண்டி மற்றும் முத்துப்பேட்டை வட்டாரத்தில் தமிழக அரசு முதல்வர் குறுவை தொகுப்பு திட்டத்தின்கீழ் இலவச உழவு செய்து பசுந்தாளுர பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் கச்சனம், பழையங்குடி, மணலி, நெடும்பலம், எடையூர், பின்னத்தூர், பாண்டிகோட்டகம், உதயமார்த்தாண்டபுரம் கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பசுந்தாளுர பயிர்களை திருவாரூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மயில்வாகணன், வேளாண்மை துணை இயக்குநர் பாண்டியராஜன் ஆய்வு செய்தனர்.

இதுகுறித்து வேளாண்மை இணை இயக்குநர் மயில்வாகணன் கூறுகையில், திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் 2500 ஏக்கர், முத்துப்பேட்டை வட்டாரத்தில் 2,250 ஏக்கரில் பசுந்தாளுர பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சாகுபடி செய்யப்பட்டுள்ள பசுந்தாளுர பயிர் சாகுபடி செய்வதால் மண்ணில் வளம் பெருகும், நுண்ணுயிரிகள் அதிகரிக்கும், மண்ணில் காற்றோட்டம் அதிகரிக்கும், இடப்படும் ரசாயன உரம் பயிருக்கு முழு அளவில் கிடைக்கும் வாய்ப்பு அதிகரிக்கும். எனவே விவசாயிகள் பசுந்தாளுர பயிர் சாகுபடி செய்யலாம்.

இதற்கான ஆலோசனையை வேளாண்மைத்துறை அதிகாரிகளிடம் கேட்டு தெரிந்து கொள்ளலாம். தற்போது விவசாயிகள் பசுந்தாளுர பயிர் சாகுபடி செய்வதில் அதிக ஆர்வத்துடன் உள்ளனர் என்றார். வேளாண்மை உதவி

இயக்குநர் சிவகுமார், வேளாண்மை அலுவலர்கள் பாஸ்கர், அசோக், வேளாண்மை துணை அலுவலர்கள் துரைராஜன், சங்கர், வேளாண்மை உதவி அலுவலர்கள் மகேஷ், சாமிநாதன், ஜோதிகணேசன், ரமேஷ்குமார், சிவரஞ்சனி, மகரஜோதி பங்கேற்றனர்.

## அவரையை அழிக்கும் காய்ப்புழு தடுக்க அதிகாரிகள் ஆலோசனை

ராமநாதபுரம் : அவரையில் காய்ப்புழு நோய் தாக்குதல் ஏற்பட்டால் தப்பிக்கும் வழிமுறைகள் குறித்து தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் ஆலோசனை வழங்கி உள்ளனர். பழநியை சுற்றியுள்ள அக்கமநாயக்கன்புதூர், கரடிகூட்டம், காவலப்பட்டி, கணக்கன்பட்டி, பாப்பம்பட்டி, சத்திரப்பட்டி, போதுப்பட்டி, தாசிரிபட்டி, அமரபூண்டி உள்ளிட்ட கிராமங்களில் காய்கறி பயிரிடுதல் அதிக அளவு நடக்கிறது. குறிப்பாக கத்தரிக்காய், வெண்டைக்காய், வெங்காயம், அவரை, தக்காளி உள்ளிட்ட காய்கறிகள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. தற்போது அவரை அதிக அளவு பயிரிடப்பட்டுள்ளது.

இக்காயில் தற்போது காய்ப்புழுத் தாக்குதல் ஏற்பட்டு, செடியிலேயே வீணாகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்நோய் தாக்குதல் குறித்து பழநி வட்டார தோட்டக்கலைத்துறை அதிகாரிகளிடம் கேட்ட போது கூறியதாவது, காய்ப்புழுத் தாக்குதல் ஆரம்ப கட்டமாக இருந்தால் குளோரி பைரிபாஸ் 1 லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி அளவிலும், தாக்குதல் அதிக அளவு இருந்தால் டிசைடர் மருந்து 1 லிட்டருக்கு 1 மில்லி கலந்து இரண்டு மூன்று நாட்களுக்கு தெளிக்க வேண்டும். தாக்குதல் புழுவின் பரிணாமம் முட்டை, புழு என பல்வேறு கட்டங்களாக இருப்பதால் லார்வின் மருந்தை 10 லிட்டர் நீருக்கு 20 கிராம் கலந்து தெளித்து வந்தால் இந்நோய்த் தாக்குதலில் இருந்து தப்பிக்கலாம். இவ்வாறு கூறினர்.

## நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பு : மானாவாரியில் நவதானியங்கள் பயிரிடாததால் குறைந்து வரும் நாட்டுக்கோழி வளர்ப்பு

க.பரமத்தி: க.பரமத்தி ஒன்றிய பகுதியில் உள்ள போதிய மழையின்மையால் மானாவாரி நிலங்களிலும் விதைப்பின்றி ஒரு கட்டமாக நாட்டுக்கோழி வளர்ப்பு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

க.பரமத்தி ஒன்றியத்தில் அணைப்பாளையம், அஞ்சூர், ஆரியூர், அத்திப்பாளையம்,

சின்னதாராபுரம், எலவனூர், கூடலூர் கிழக்கு, கூடலூர் மேற்கு, கார்வழி, காருடையம்பாளையம், கோடந்தூர், குப்பம், மொஞ்சனூர், முன்னூர், புஞ்சைகாளகுறிச்சி, நடந்தை, நெடுங்கூர், க.பரமத்தி, பவித்திரம், நஞ்சைகாளகுறிச்சி, புன்னம், ராஜபுரம், சூடாமணி, தென்னிலை கிழக்கு, தென்னிலை மேற்கு, தென்னிலை தெற்கு, தொக்குப்பட்டி, துக்காச்சி, தும்பிவாடி, விஸ்வநாதபுரி ஆகிய 30ஊராட்சிகள் உள்ளன.

அனைத்து கிராம புற பகுதிகளில் விவசாயம் செய்வது மற்றும் கால்நடைகள் வளர்ப்பதை கிராம மக்கள் பிரதான தொழிலாக செய்து வருகின்றனர். தற்போது கடந்த சில மாதங்களாகவே போதிய மழை இல்லாததால் அமராவதி ஆறு மற்றும் ராஜவாய்க்கால் தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடக்கிறது. ஆடி மாதம் தொடங்கி 20 நாட்களை கடந்தும் போதிய மழை இல்லாததால் நவதானியம் பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. இதனால் கிராமங்களில் நாட்டு கோழி வளர்ப்பு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

இதுகுறித்து பெயர் வெளியிட விரும்பாத விவசாயி கூறுகையில், கடந்த 4 ஆண்டுக்கு முன் க.பரமத்தி ஒன்றிய பகுதியில் மானாவாரி நிலங்களில் கம்பு, சோளம், கேழ்வரகு உள்ளிட்ட நவதானிங்களை விவசாயிகள் அதிகளவில் பயிரிட்டனர். இதனுடன் நாட்டுகோழி வளர்ப்பை விவசாயிகள் இணை தொழிலாக செய்தனர். இதனால் கிராம பகுதியில் நாட்டுக்கோழி அதிகளவில் வளர்க்கப்பட்டதுடன், விற்பனையும் அமோகமாக நடந்து வந்தது. இதன் காரணமாக விவசாயிகளின் வாழ்வாதாரம் சிறந்து விளங்கியது.

தற்போது போதிய மழையின்மையால் க.பரமத்தி ஒன்றிய பகுதியில் மானாவாரி நிலங்களில் தண்ணீரில்லாததால் நவதானியங்களை விவசாயிகள் அதிகளவில் பயிரிடுவதில்லை. இதனால் நவதானியங்கள் விலை கடும் ஏற்றத்தில் உள்ளது. மேலும் பிராய்லர் கோழிகளின் ஆதிக்கம் போன்றவைகளால் நாட்டுக்கோழி வளர்ப்பு படிப்படியாக குறைந்து வருகிறது என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

## தோவாளை மார்க்கெட்டில் பிச்சி– முல்லை பூக்களின் விலை கிலோவுக்கு ரூ. 100 உயர்வு



நாகர்கோவில்,

தோவாளை பூ மார்க்கெட்டில் பிச்சி, முல்லை பூக்களின் விலை கிலோவுக்கு ரூ. 100 உயர்ந்தது.

<u>பூ மார்க்கெட்</u>

நாகர்கோவில் அருகே தோவாளையில் பூ மார்க்கெட் உள்ளது. இங்கு தினமும் குமரி மற்றும் தமிழகத்தின் பல இடங்களில் இருந்து பூக்களை விற்பனை செய்வதற்காக விவசாயிகள் கொண்டு வருகிறார்கள். அவற்றை வாங்கி செல்வதற்காக உள்ளூர் மற்றும் கேரள வியாபாரிகள் ஏராளமாக வருவார்கள்.

பூக்கள் இங்கு சில்லறையாகவும், மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். தினமும் அதிகாலையிலேயே பூக்கள் விற்பனைக்கு வருவதால், வியாபாரிகளும் அதிகாலையிலேயே வந்து பூக்களை ஏலம் எடுத்து செல்வார்கள். விற்பனையும் மும்முரமாக நடைபெறும்.

கடந்த சில நாட்களாக தோவாளை பூ மார்க்கெட்டில் பூக்களின் விலை வீழ்ச்சி அடைந்த நிலையில் காணப்பட்டது. நேற்று பூக்களின் விலையில் சற்று உயர்வு காணப்பட்டது. குறிப்பாக நேற்று முன்தினம் கிலோ ரூ. 200–க்கு விற்பனையான பிச்சி நேற்று ரூ. 100 உயர்ந்து ரூ.300–க்கு விற்கப்பட்டது. இதுபோல், முல்லை ரூ. 150–ல் இருந்து ரூ. 250 ஆக உயர்ந்தது.

<u>மேலும் உயர வாய்ப்பு</u>

அடுத்த வாரம் ஆவணி மாதம் பிறப்பதையொட்டி திருமணம் போன்ற சுபமுகூர்த்த நிகழ்ச்சிகள் நடைபெறும். அப்போது பூக்களின் தேவை அதிகரிக்கும். இதனால், பூக்களின் விலை மேலும் உயர வாய்ப்பு உள்ளதாக பூ வியாபாரிகள் தெரிவித்தனர்.

மற்ற பூக்களின் விலை விவரம் ஒரு கிலோவிற்கு வருமாறு:–

அரளிப்பூ ரூ.40, மல்லிகை ரூ.200, கனகாம்பரம் ரூ. 350, வாடாமல்லி ரூ.25, கேந்தி ரூ.35, சம்பங்கி ரூ. 40, பட்டன்ரோஸ் ரூ.120, துளசி ரூ.20, பச்சை ரூ.5, கோழிப்பூ ரூ.20, கொழுந்து ரூ.100, மஞ்சள் கேந்தி ரூ.40, சிவந்தி ரூ.120, வெள்ளை சிவந்தி ரூ. 150, மாம்பழ கேந்தி ரூ.25, ரோஜா (100 எண்ணம்) ரூ.35,தாமரை (100 எண்ணம்) ரூ.500, ஸ்டெம்பு ரோஸ் (கட்டு) 150 என விற்பனை செய்யப்பட்டது.

**பழமையான பொந்தன் புளி மரங்களை அழிவில் இருந்து பாதுகாக்க வேண்டும் தொல்லியல் ஆய்வாளர் வேண்டுகோள்**



ராமநாதபுரம்

மருத்துவகுணம் கொண்ட பழமையான பொந்தன் புளி மரங்களை பாதுகாக்க வேண்டும் என்று பொதுமக்களுக்கும், அரசுக்கும் தொல்லியல் ஆய்வாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

<u>கம்பீரம்</u>

ராமநாதபுரம் மாவட்டத்திற்கு பெருமை சேர்ப்பவை ராமேசுவரம், ஏர்வாடி, ஓரியூர் உள்ளிட்ட ஆன்மிக தலங்கள் மட்டுமல்ல. ஆயிரம் ஆண்டுகளைக் கடந்தும் கம்பீரமாக காட்சியளிக்கும் பொந்தன்புளி மரங்களும் தான். இதுபற்றி ஆய்வு செய்த திருப்புல்லாணி அரசு மேல்நிலைப்பள்ளி தொன்மைப் பாதுகாப்பு மன்ற பொறுப்பாசிரியரும், தொல்லியல் ஆய்வாளருமான ராஜகுரு கூறியதாவது:–

ராமநாதபுரம் மாவட்டத்தின் கடற்கரை மிக நீண்டது. இங்கு அதிகஅளவில் உப்பங்கழிகள் காணப்படுகின்றன. இதனால் இங்கு சங்க காலம் முதல் இயற்கையான பல துறைமுகங்கள் செயல்பட்டு வந்திருக்கின்றன. தொண்டி, அழகன்குளம், பெரியபட்டினம், கீழக்கரை, மருங்கூர்ப்பட்டினம், தேவிபட்டினம்,

ராமேசுவரம், தனுஷ்கோடி, பாம்பன், புதுப்பட்டினம், தீர்த்தாண்டதானம், நானாதேசிப்பட்டினம் (தளிர்மருங்கூர்) உள்ளிட்ட பல துறைமுகங்கள் புகழ்பெற்று விளங்கி இருந்துள்ளதை கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகிறது.

கி.பி.1269–ல் தீர்த்தாண்டதானத்தில் அஞ்சுவன்னம், மணிக்கிராமம், சாமந்தப்பண்டசாலி, தோயாவத்திர செட்டிகள், தென்னிலங்கை வளஞ்சியர், கைக்கோளர், தூசுவர், வாணியர், கரையார் ஆகிய வணிகக்குழுவினர் தங்கி இருந்ததாக அந்த கோவில் கல்வெட்டு தெரிவிக்கிறது. அழகன்குளம், தொண்டி, பெரியபட்டினம் உள்ளிட்ட துறைமுகங்களுக்கு ரோமானியர்கள், சீனர்கள், அரேபியர்கள் ஆகிய வெளிநாட்டு வணிகர்கள் வணிகம் செய்ய வந்துள்ளதை அந்தபகுதியில் நடத்தப்பட்ட அகழாய்வுகளில் கிடைத்த பொருள்கள் நிரூபிக்கின்றன.

<u>பொந்தன்புளி மரங்கள்</u>

இந்த நிலையில் ஆப்பிரிக்கா, மடகாஸ்கர், ஆஸ்திரேலியா, அரேபியா ஆகிய வெளிநாடுகளை பூர்வீகமாகக் கொண்ட பொந்தன்புளி மரங்கள், வெளிநாடுகளில் இருந்து வந்த வணிகர்களால் ராமநாதபுரம் பகுதிக்கு வந்துள்ளது. தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்ட குதிரை இனங்கள் தவிர பாண்டிய மன்னர்கள் அரேபியாவில் இருந்து பல உயர் ரக குதிரைகளை இறக்குமதி செய்துள்ளனர். இந்த குதிரைகளுக்கு தீவனமாக பொந்தன்புளி மரத்தின் இலைகள், கனிகள், காய்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதற்காக இந்தமரத்தின் விதைகள் பாலைவன பகுதிகளில் இருந்து கொண்டுவரப்பட்டு பாண்டிய நாட்டின் பல பகுதிகளில் நடப்பட்டுள்ளன. இந்த மரங்கள் சாதாரணமாக 1,500 ஆண்டுகளுக்கும் மேல் உயிர் வாழ்பவை.

ராமநாதபுரம் பெரியார் நகரிலும், தேவிபட்டினம் உலகம்மன் கோவிலிலும், ராமேசுவரத்திலும், பாம்பனிலும், சேந்தனேந்தலிலும், அமர்ந்த நந்தி வடிவில் அழகன்குளம் கடற்கரையிலும், ஏர்வாடியிலும் தற்போதும் இந்தமரங்கள் காணப்படுகின்றன. கீழக்கரை, புல்லங்குடி உள்ளிட்ட பல பகுதிகளில் இந்தமரங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. இந்தமரத்தின் பெயரால் கமுதி பகுதியில் பொந்தன்புளி என்று ஒரு ஊர் உள்ளது. ஆனால் இந்த ஊரில் இந்தமரம் தற்போது இல்லை.

பிரான்சு நாட்டை சேர்ந்த மைக்கேல் அடன்சன் என்ற தாவரவியல் அறிஞர் செனிகல் நாட்டில் உள்ள சோர் என்ற தீவில் கி.பி.1749–ம் ஆண்டில் இந்தமரத்தை கண்டுபிடித்தார். இதனால் அவர் பெயரையும் இணைத்து அடன்சோனியா டிஜிடேட்டா என்ற தாவரவியல் பெயர் இதற்கு சூட்டப்பட்டது. ஆங்கிலத்தில் இந்தமரத்தை போபாப் என அழைக்கிறார்கள்.

## டீ கப் வடிவம்

இந்தமரத்தில் 8 வகைகள் உள்ளன. டீ கப் வடிவில் கூட ஒரு வகை உள்ளது. இதன் அடிமரம் டீ கப் போன்ற வடிவத்தில் இருப்பதால் இந்தபெயர் பெற்றுள்ளது. 25 மீட்டர் வரையிலும் உயரமாக வளரக்கூடிய இதன் அடிமரத்தின் சுற்றளவு சுமார் 14 மீட்டர் வரை இருக்கும். அத்துடன் நேராக உருளை வடிவில் வளர்ந்து உச்சியில் கிளைகளைப் பரப்புகின்றது. ஓராண்டில் 6 முதல் 7 மாதங்கள் வரை இதில் இலைகள் உதிர்ந்து காணப்படும்.

வெண்மை நிறத்தில் இருக்கும் இதன் பூக்கள் கிளையின் நுனியில் பூக்கக்கூடியவை. நீண்ட காம்புகளில் பழுப்பு நிறத்தில் உருவாகும் இதன் காய், பழங்கள் நீண்ட நாட்களுக்கு மரத்திலேயே தொங்கிக்கொண்டிருக்கும். இதன் பழச்சாற்றை அம்மை நோய்க்கும், இலையை அவித்து காய்ச்சலுக்கும், மரப்பட்டைகளை காயங்களுக்கும் மருந்தாக பயன்படுத்துகிறார்கள். இதன் கனியை சர்பத்தாகவும் பயன்படுத்தலாம்.

## மக்களின் நம்பிக்கைகள்

பண்டைக்கால ஆப்பிரிக்க மக்கள் இந்த மரத்தை தூய்மையின் சின்னமாக கருதினார்கள். இதன் கீழே இருப்பவர்கள் ஆபத்தில் இருந்து காப்பாற்றப்படுவார்கள் என்றும், அதன் நிழலில் பேசி முடிவெடுக்கும் எந்தக்காரியமும் கை கூடும் என்றும் நம்பினார்கள். அதனால் பலர் இந்த மரத்தின் கீழே வாழ்ந்தார்கள். ஒரு சிலர் இந்த மரத்தின் அருகில் தாங்கள் வீடுகளைக்கட்டி குடியிருந்தார்கள்.

ஐவிரல் அமைப்புடைய இலைகள், இயற்கையாக உருவாகக் கூடிய பெரிய அளவிலான பொந்துகள், யானை போன்ற மிக பிரமாண்டமான அடிமரம், பயன்தரும் கனிகள், பட்டைகள் ஆகியவை இந்தமரத்தின் சிறப்புகள். இதன்

பிரமாண்டம், பொந்து போன்ற அமைப்பு, இலைகளின் புளிப்பு சுவை ஆகியவற்றால் இந்த மரத்துக்கு தமிழர்கள் பொந்தன் புளி என பெயர் சூட்டி உள்ளார்கள். இந்தமரத்தை யானைமரம், ஆனைப்புளி, பெருக்கமரம், பப்பரப்புளி என பல பெயர்களில் அழைக்கிறார்கள். இது இலங்கையில் மன்னார் உள்ளிட்ட பல இடங்களில் காணப்படுகிறது. பொந்தன்புளி மரத்தின் வயது 1000 ஆண்டுகளை கடந்தபின்பே அதில் பொந்து உண்டாகிறது. சில மரங்களில் உள்ள பொந்துகள் 60 பேர் வரை அமரக்கூடிய அளவிற்கு பெரியதாக இருக்கும். முதிர்ந்த தண்டுகளில் ஏற்படும் துளைகள் மூலம் இந்தமரம் ஒரு லட்சம் லிட்டர் வரை தண்ணீரை சேர்த்து வைக்கிறது. ஆப்பிரிக்காவின் சில பகுதிகளில் இந்தமரத்தில் துளையிட்டு அதிலுள்ள நீரை அருந்துகிறார்கள். வெளிநாடுகளில் இந்தமரங்களை கொண்டு நிறைய கதைகள் எழுதி உள்ளார்கள்.

<u>பாதுகாக்க வேண்டும்</u>

ராமநாதபுரம் பெரியார் நகரில் உள்ள மரத்தில் பெரிய அளவிலான பொந்துகள் காணப்படுகின்றன. எனவே இந்தமரம் நடப்பட்டு 1000 ஆண்டுகள் ஆகி இருக்கலாம். இந்தமரங்களின் பிரமாண்டம் இதில் உண்டாகும் பொந்து ஆகியவை மக்களிடம் பெரிய பயத்தை ஏற்படுத்தி இருக்க வேண்டும். எனவே இதன் பழம்பெருமை தெரியாத பலர் இந்தமரத்தை வெட்டியும், தீ வைத்து எரித்தும் அழித்துள்ளனர். இந்தமாவட்ட கடற்கரை பகுதிகள் முழுவதும் இந்தமரங்கள் அதிக அளவில் பரவி இருந்து பின்னர் அழிக்கப்பட்டிருக்கலாம். இந்தமரங்கள் காணப்படும் ஊர்களில் எல்லாம் வெளிநாட்டு வணிகர்கள் தங்கி இருந்து வணிகம் செய்ததின் அடையாளமாக இந்தமரங்கள் விளங்குகின்றன. இவை 1000 ஆண்டுகளின் வரலாற்றுக்கு சான்றாக உள்ளன. தீர்த்தாண்டதானம் மட்டுமின்றி ராமேசுவரம், தேவிபட்டினம், தளிர்மருங்கூர் உள்ளிட்ட பல நகரங்களில் வெளிநாட்டு வணிகர்கள் தங்கி இருந்துள்ளனர். தேவிபட்டினம் பகுதியில் அரபுநத்தம் என்று ஒரு பகுதி இருப்பது அங்கு அரேபிய வணிகர்கள் தங்கி இருந்ததை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

மாநிலம் முழுவதும் கணக்கெடுக்கப்பட்டதில் இந்தமரங்கள் ராமநாதபுரம் மாவட்டம் தவிர, ராஜபாளையம், மதுரை அமெரிக்கன் கல்லூரி, சென்னை உள்ளிட்ட பிற இடங்களில் மிகக்குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. இது ஒரு அரியவகை மரமாகும். ஏற்கனவே இங்குள்ள வரலாற்று சிறப்பு மிக்க பொந்தன்புளி மரங்களை வேலியிட்டு அழிவில் இருந்து பாதுகாக்கவும், தொடர்ந்து

பராமரிக்கவும், புதிதாக பல இடங்களில் பொந்தன்புளி மரங்களை நட்டுவைத்து வளர்க்கவும் வேண்டும் என இளைஞர்களையும்,பொதுமக்களையும், தமிழக அரசையும் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

## தஞ்சையில் இருந்து நெல்லைக்கு 1,150 டன் புழுங்கல்அரிசி சரக்குரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது



தஞ்சாவூர்

தஞ்சையில் இருந்து சரக்கு ரெயிலில் 1,150 டன் புழுங்கல்அரிசி நெல்லைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

<u>நெல் கொள்முதல்</u>

தமிழகத்தில் பொதுவினியோக திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு புழுங்கல்அரிசி, பச்சரிசி, மண்எண்ணெய், சர்க்கரை, பருப்பு போன்றவை வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக வெளிமாநிலங்களில் இருந்தும், வெளிமாவட்டங்களில் இருந்தும் புழுங்கல்அரிசி, பச்சரிசி போன்றவை தஞ்சை மாவட்டத்திற்கு கொண்டு வரப்படும். அதேபோல் தஞ்சையில் இருந்தும் பிற மாவட்டங்களுக்கு புழுங்கல்அரிசி, பச்சரிசி போன்றவை அனுப்பி வைக்கப்படும்.

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது வழக்கம். இவ்வாறு சாகுபடி செய்யும் நெல் அறுவடை செய்யப்பட்டு, தமிழகஅரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்காக ரெயில் மற்றும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேலும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் அரிசி ஆலைகளுக்கும் அரவைக்காக அனுப்பி வைக்கப்படுவது வழக்கம்.

1,150 டன் புழுங்கல்அரிசி

அவ்வாறு அரவைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நெல் பின்னர் பல்வேறு மாவட்டங்களுக்கு பொது வினியோகத்திட்டத்தின் கீழ் வினியோகம் செய்ய அரிசி மூட்டைகளாக அனுப்பி வைக்கப்படுகிறது. அதன்படி தஞ்சை மாவட்டத்தில் பிள்ளையார்பட்டி, விளார் ஆகிய பகுதிகளில் உள்ள சேமிப்பு கிடங்குகளில் இருந்து லாரிகளில் புழுங்கல்அரிசி மூட்டைகள் ஏற்றப்பட்டு தஞ்சை ரெயில் நிலையத்திற்கு நேற்று கொண்டு வரப்பட்டன. பின்னர் இந்த அரிசி மூட்டைகள் சரக்குரெயிலில் ஏற்றப்பட்டன. மொத்தம் 20 வேகன்களில் 1,150 டன் புழுங்கல்அரிசி ஏற்றப்பட்டது. இதையடுத்து அரிசி மூட்டைகளுடன் சரக்குரெயில் தஞ்சையில் இருந்து நெல்லைக்கு புறப்பட்டு சென்றது.

**நீடாமங்கலத்தில் இருந்து சிவகங்கைக்கு அரவைக்காக 1,000 டன் நெல் சரக்கு ரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது**



நீடாமங்கலம்,

நீடாமங்கலத்தில் இருந்து சிவகங்கைக்கு 1,000 டன் பொதுரக நெல் அரவைக்காக சரக்கு ரெயிலில் நேற்று அனுப்பி வைக்கப்பட்டது. இதையொட்டி பாமணி மத்திய சேமிப்பு கிடங்கு மற்றும் திறந்தவெளி சேமிப்பு மையங்களில் இருந்து 75 லாரிகளில் 1,000 டன் பொதுரக நெல் நீடாமங்கலம் ரெயில் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்னர் நுகர்பொருள் வாணிபக்கழக அலுவலர்கள் முன்னிலையில், சுமை தூக்கும் தொழிலாளர்கள் நெல் மூட்டைகளை சரக்கு ரெயிலின் 21 பெட்டிகளில் ஏற்றினர். அதனைத்தொடர்ந்து நீடாமங்கலத்தில் இருந்து 1,000 டன் நெல் மூட்டைகளுடன் சரக்கு ரெயில் சிவகங்கைக்கு புறப்பட்டு சென்றது.